Previous Date of examination : 07/06/2022

## நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

## திருவாரூர்

# CC No. 63/2018

2023-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ..சா.7 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரவணகுமார் | வயது | 43/2023 |
| தகப்பனார் பெயர் | கோவிந்தராசு | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | ஓவரூர் | தாலுக்கா | |

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :

நான் தற்போது ஓவரூரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 கார்த்திக் தெரியும். சாட்சிகள் உதய குமார், பிரிதிவ்ராஜ், ராமணாதன், சபரிமணி, அரவிந்தசாமி ஆகியோரை தெரியும். ஆஜர் எதிரி முருகானந்தத்தை தெரியும். ஆஜரில்லாத எதிரிகள் செந்தில்நாதன், சையது சுல்தான் ஆகியோரை தெரியும். எனக்கு எதிரிகள் செந்தில்நாதனும், முருகானந்தமும் உறவினார்கள். என்னை வெளிநாடு அனுப்புவதாக சொல்லி என்னிடம் ரூ.1,20,000/- மலேசியா அனுப்புவதாக சொல்லி 2016 ம் வருடம் கேட்டார்கள். நான் ரூ.1 லட்சம் பணத்தை அருள்ஜோதி என்பவர் மூலம் ஓவரூரில் உள்ள பிடாரி கோவிலில் வைத்து எதிரிகள் முருகானந்தம், செந்தில்நாதனிடம் ரொக்கமாக கொடுத்தேன். அனுப்புவதாக சொல்லி, என்னை வெளிநாட்டிற்கு அனுப்பவில்லை. தஞ்சாவூரில் அடித்த போலி விசாவை கொடுத்துவிட்டார்கள். அதனால் வெளிநாடு போகமுடியவில்லை. பணத்தை திரும்ப கேட்டும் அவர்கள் கொடுக்கவில்லை. அதனால் திருவாரூர் போலிசில் வந்து புகார் கொடுத்தோம். பணம் கொடுத்த அனைவரும் குரூப்பாக வந்து புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

போலிசார் என்னை விசாரித்தபோது அருள்ஜோதி மூலமாக பணம் கொடுத்த விபரத்தை சொன்னேன். எனக்கு எதிரிகள் கொடுத்தாக சொல்லும் போலி விசாவை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். போலிசார் என்னை விசாரித்தபோது

பணம் கொடுத்த தேதி,மாதம் ஆகியவற்றை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகார் கொடுக்க போனபோது நான் தனியாக புகார் கொடுத்தேனா என்றால் எல்லோரும்சேர்ந்துதான் புகார் கொடுத்தோம். அந்த புகாரிலேயே யார், யார் பணம் கொடுத்து ஏமாந்தார்கள் என்ற விபரம் உள்ளதா என்றால் உள்ளது. நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

2 வது எதிரி சையது சுல்தானை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நான்பார்த்துள்ளேன். நான் வழக்கிற்காக 2 வது எதிரியை பார்த்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2 வது எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

போலிசார் என்னை புகார் கொடுத்தபோது எல்லோரையும் சேர்த்துவிசாரித்தார்கள் என்றால் சரிதான். எஸ்.பி. ஆபீஸில் வைத்துதான் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். புகார் கொடுத்தபோது எங்களோடு 3 வது எதிரி முருகானந்தம் இருந்தார் என்றால் சரியல்ல. நாங்கள் புகார் கொடுத்த பிறகுதான் போலிசார் 3 வது எதிரியை கைது செய்து அழைத்து வந்தார்கள். புகார் கொடுத்த பின்னர் 4, 5 நாட்கள் கழித்துதான் எதிரி முருகானந்தத்தை போலிசார் பிடித்தார்கள். நான் புகார் கொடுக்கவில்லை என்றும், போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 3 வது எதிரியும் என்னைபோல் பாதிக்கப்பட்ட நபர் என்றால் அது எனக்கு தெரியாது. போலிசார் சொல்லிக்கொடுத்தபடி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3 வது எதிரியை பார்த்ததில்லை என்றும், அவரிடம் பணம் எதுவும் நான் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 3 வது எதிரி எனக்கு உறவினர் அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

ஒம்/-எல்.ரகுபதிராஜா,
நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.

Previous Date of examination : 07/06/2022

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No. 63/2018

2023-ம் ஆண்டு ஜனவரி மாதம் 12 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ..சா.8 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலசுப்பிரமணியன் | வயது | 41/2023 |
| தகப்பனார் பெயர் | கணேச தேவர் | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | ஓவரூர் | தாலுக்கா | |

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :

(1) நான் தற்போது ஓவரூரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 கார்த்திக் தெரியும். சாட்சிகள் உதய குமார், பிரிதிவ்ராஜ், ராமணாதன், சபரிமணி, அரவிந்தசாமி ஆகியோரை தெரியும். ஆஜரில் உள்ள எதிரி முருகானந்தத்தை தெரியும். ஆஜரில்லாத எதிரிகள் செந்தில்நாதன், சையது சுல்தான் ஆகியோரை தெரியும். 2014 ம் வருடம் அருள்ஜோதி என்பவர் வெளிநாட்டிற்கு ஆள் எடுக்கிறார்கள், போகிறாயா என்று கேட்டார். செந்தில்நாதன்மூலம் வெளிநாடு போவதற்கு பாஸ்போர்ட்டும், பணம் ரூ.60,000/-மும் கொடுத்தேன். அவர்கள் ரூ.1 லட்சம் கேட்டார்கள். பணத்தை ஓவரூரில் உள்ள பிடாரி கோவில் வைத்து அருள்ஜோதி மற்றும் எதிரி செந்தில்நாதனிடம் ரொக்கமாக கொடுத்னே்.

(2) அதன் பிறகு ஒரு வாரத்தில் விசா வருவதாக சொன்னார்கள். ஆனால் அவ்வாறு விசா வரவில்லை. நான் கத்தாருக்கு போவதற்கு பணம் கொடுத்ததால் ஒருவாரத்தில் விசா வரும் என செந்தில்நாதன் சொன்னார். அதன் பிறகு எனக்கு முன்பு சிலருக்கு கொடுக்கப்பட்ட விசா போலிவிசா என தெரியவந்தது. பணம் கொடுத்து விசா வந்த ஏழு பேரும் போலிவிசா என்றும், ஏமாந்துவிட்டதாக தெரியவந்தது. அதன் பிறகு எல்லோரும் சேர்ந்து திருவாரூரில் வந்து கேஸ் கொடுத்தோம். எனது பணத்தை செந்தில்நாதன் தருவதாக சொன்னார். இதுவரை தரவில்லை. எனக்கு ஒரு கவர் வந்தது. அந்த கவரில் ஒரு பாஸ்போர்ட் இருந்தது. அதில் எனது பாஸ்போர்ட் இருந்தது. வேறு ஒரு நபரின் பாஸ்போர்ட் இருந்தது. அந்த கவரை செந்தில்நாதன் அனுப்பியிருந்தார். அதில் இருந்த பாஸ்போர்ட் என்னுடையதில்லை

என்பதால் அதனை போலிசாரிடம் கொடுத்துவிட்டேன். எனது பாஸ்போர்ட் செந்தில்நாதன் வசம் இருந்ததை போலிசார் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பாஸ்போர்ட்டானது என்னுடையதுதான். ( **பாஸ்போர்ட் ஏற்கனவே அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எனது பாஸ்போர்ட்டை போலிசார் இதுவரை மீட்டுக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரி செந்தில்நாதனிடம் எனது பாஸ்போர்ட்டையும், பணத்தையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க போலிசாரிடம் பாஸ்போர்ட்டை கொடுத்துவிட்டு எதிரி செந்தில்நாதனிடம் கொடுத்தாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தனியாக புகார் கொடுத்தேனா என்றால் கார்த்தியோடு சேர்ந்துதான் புகார் கொடுத்தோம். அதில் நான் ஏமாந்த விபரமும் சொல்லப்பட்டுள்ளதா? என்றால் சொல்லப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் 1வது எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம்இல்லை என்றால் சரியல்ல.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

2வது எதிரி சையது சுல்தானை நான் நேரில் பார்த்ததில்லை என்றால் சரிதான். அவரிடம் நான் தொகை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 2வது எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

இல்லை என தெரிவிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டது.

**மறுவிசாரணை** - இல்லை.

ஒம்/-எல்.ரகுபதிராஜா,
நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.